பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 09 வெள்ளிக்கிழமை (25-09-1992) UTHAYAN – A Lively National Tamial Daily கதிர் 302

# யுத்தம் தொடர்வது குறித்து அரசின் மீது குற்றச்சாட்டு

## கத்தோலிக்க ஆயர்கள் தீர்மானம்

கொழும்பு. செப்டம்பர் 25

வடக்கு — கிழக்கில் அரசாங்கம் யுத்தத்தை தொடர்ந்து நடத்தி வருவதால் ஏற்பட்டுள்ள நிலைமைகளைச் சுட்டிக்காட்டி இலங்கை கத்தோலிக்க ஆயர் சம்மேளனம் அரசைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யுத்தத்தினால் அரசியல், பொருளாதார மட்டத்தில் பெரும் சீரழிவுகள் ஏற்பட்டுள்ளதற்கு அரசாங்கமே முழுப் பொறுப்பாகும் என்றும் அந்தத் தீர்மானத்தில் கடுமையாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற ஆயர்கள் சம்மேளனத்தில் எடுக்கப்பட்ட இத்தீர்மானம் நேற்றுக் கொழும்பில் வெகுசன தொடர்பு சாதனங்களுக்கு வெளியிடப்பட்டது. சம்மேளனத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் 12 ஆயர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

இத் தீர்மானத்தின் மூலம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான யுத்தத்தில் ராணுவ உயிரிழப்பு அதிகரிப்பு

### அமைச்சர் ரணில் ஒப்புக்கொள்கிறார்

விடுதலைப் புலிகளை எதிர்த்து நடைபெறும் யுத்தத்தில் சமீபகாலமாக இராணுவத்தினரின் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா புதன்கிழமை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

எனினும்— விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிடுவதில் இராணுவம் சிக்கல் எதனையும் எதிர் கொள்ளவில்லை என்றும் இது தொடர்பாக இராணுவம் எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தில் புதிதாகச் சேர சிங்கள இளைஞர்கள் தயங்குகின்றனர் என நிலவும் வதந்தியையும் அமைச்சர் மறுத்தார். (இ-எ)

## திலீபன் நினைவு நிகழ்ச்சிகள் உச்சக் கட்டம் அடைகின்றன

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை உச்சக்கட்டத்தை அடைகின்றன.

நகரங்கள், கிராமங்களில் இதுவரை விடுபட்ட இடங்களிலும் நேற்று தியாகி திலீபனின் திருவுருவப்படம் வைத்து மக்கள் காலையிலும், மாலையிலும் மலரஞ்சலி, தீபாஞ்சலி செலுத்தினர்.

இல்லங்களின் முன்னாலும், வீதிகள், சந்திகளிலும் எங்கு பார்த்தாலும் அலங்கரிக்கப்பட்ட சிறு குடில்களின் மத்தியில் தியாகி திலீபனின் திருவுருவப்படம் ஒளிர்ந்து கொண்டிருக்கக் காணப்பட்டது. எங்கு திரும்பினும் அதே காட்சி.

திலீபனின் உயிர் பிரிந்த நாளை தினம் எழுச்சி தினமாகக் கொண்டாடப்படுவதற்கு கட்டியம் கூறுவது போலவும், களை கட்டியதாகவும் நேற்றைய நிகழ்வுகள் அமைந்தன.

யாழ். பல்கலைக் கழகம்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை விடுமுறை தினம்

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி லெப். கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினமான நாளை சனிக்கிழமை வழமைபோல் பொது விடுமுறை தினமாக அனுஷ்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் இறுதி நாள் நிகழ்ச்சிகளைப் பெரிய அளவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அன்று காலை தியாகி திலீபனின் சொந்த ஊரான ஊரெழுவில் உள்ள நினைவுத் தூபியிலிருந்து நல்லூர் வரை தூக்குக் காவடி எடுக்கப்படும்.

நல்லூரில் நினைவுக் கூட்டம் நடைபெறும் இடத்தில் மேடை அமைக்கப்பட்டுள்ளது ஆலயச் சூழல் நேற்றிரவு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. (இ-5)

## தியோபிளஸ் கொலை:

### சந்தேக நபர் சயனைட் உட்கொண்டு மரணம்

கொழும்பு, செப். 25

சிரேஷ்ட பொலீஸ் அதிபர் அந்தோனிப்பிள்ளை தியோபீலஸை கடந்த புதன்கிழமை மாலை கொழும்பு மாநகரில் சுட்டுக்கொன்றதாகச் சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பணியகப் பேச்சாளர் ஒருவர் தகவல் தருகையில், தற்கொலை செய்து கொண்ட சந்தேக நபர் ஏறாவூரைச் சேர்ந்த குலசிங்கம் யோகச்சந்திரன் (வயது 23) என்றும் —

அவர் கைது செய்யப்பட்டிருந்த வேளையில் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார் என்றும் -

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழகத்தில் நேற்றும் வன்முறை தொடர்ந்தது

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து நேற்றும் தமிழ் நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

தஞ்சை மாவட்டம் - திருநீலக்குடி அருகே சோழன் போக்குவரத்துக் கழக பஸ் ஒன்றும் புதுப்பட்டியில் லொறி ஒன்றும் எரிக்கப்பட்டன. சேலம் மாவட்டத்தில் ரேஞூரில் தனியார் பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.

தென் ஆற்காடு மாவட்டம் - நெய்வேலி மற்றும் சேத்தியாதோப்பு ஆகிய இடங்களிலும் பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

பல இடங்களில் பஸ்கள் மீது கல்வீச்சுச் சம்பவங்களும் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-த)

### ராமதாஸ் கட்சிக்கு தடை; ஜெலலிதா கோரிக்கை

சென்னை, செப். 25

டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சியை உடனடியாகத் தடை செய்யுமாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசைக் கோரியுள்ளார்.

இதுசம்பந்தமாக தாம் பிரதமர் நரசிம்மராவுக்கு கடிதம் எழுதியிருப்பதாக ஜெயலலிதா நேற்று சட்டசபையில் தெரிவித்தார்.

சட்டசபையில் செல்வி ஜெயலலிதா இதனைத் தெரிவிக்கையில் உறுப்பினர்கள் பலர் கரவொலி எழுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாட்டாளி மக்கள் கட்சி நடத்தும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து காங்கிரஸ் எம். எல். ஏ. பொன்னம்மாள் கொண்டு வந்த கவன ஈர்ப்புப் பிரேரணை மீது பேசுகையிலேயே முதலமைச்சர் அக்கட்சி தடைசெய்யப்பட வேண்டும் என்ற தமது அரசின் நிலைப்பாட்டை தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சியினர் கடந்த புதன்கிழமை தென்ஆற்காடு மாவட்டத்தில் தாழநல்லூர் ரயில் நிலைய

(2 ஆம் பக்கம் பார்க்க)

நீர் பயிரை வளர்க்கும்
பயிர் உயிரை வளர்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக சட்டசபையில்

# அ.தி.மு.க.-கா்ங்: உறுப்பினர் நேற்றும் கடும் வாக்குவாதம்

சென்னை, செப். 25

தமிழக சட்டசபையில் காங் கிரஸ் உறுப்பினர்கள் சிலருக் கும் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உட்பட ஆளும் அ. தி. மு. க உறுப்பினர்களுக் கும் இடையே இரண்டாவது நாளாக நேற்றும் கடும் வாக்கு வாதம் இடம்பெற்றது.

அவை நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் கடைசி யாகப் பேசிய இந்திரா காங் கிரஸ் எம். எல். ஏ. பீற்றர் அல்போன்ஸ், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருவதாகக் குற்றஞ் சாட்டி னார். அதற்கு ஆதாரமாக ஒரு சில பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளை அவர் சுட்டிக்காட்டினார்.

திரு. அல்போன்ஸின் பேச் சின்போது இடை இடையே முதலமைச்சரும் மற்றும் அமைச்சர்கள் கிருஷ்ணசாமி, அரங்கநாயகம், முத்துசாமி, செங்கோட்டையன், திருமதி இந்திரகுமாரி ஆகியோரும் குறுக்கிட்டு வாதம் செய்த னர்.

பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது உயிரிழந்த கைதிகளின் எண்ணிக்கை ஒன்பதுதான் என்றும்—

திரு. அல்போன்ஸ் கூறியது போன்று பதினெட்டு அல்ல என்றும்—

திட்டவட்டமான உண்மை யான தகவல்களை உறுப்பினர் கள் சமர்ப்பிக்கப்வேண்டும் என்றும்— முதலமைச்சர் கூறி னார்.

தாம் தெரிவித்த குற்றச் சாட்டை திரு: அல்போன்ஸ் வாபஸ் வாங்கவேண்டும் என் றும் அவர் கேட்டுக் கொண் டார்.

இதனை அடுத்து இரு தரப் பினருக்கும் இடையே கூச்ச லும் குழப்பமும் நிலவின.

## திருநாவுக்கரசுக்கு முன்பிணை

ஊழல் குற்றச்சாட்டுகளுக் காக வழக்குத் தொடரப்பட் டுள்ள முன்னாள் மாநில அமைச்சரும் சட்டசபை உறுப் பினருமான திரு. எஸ். திரு நாவுக்கரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் நேற்று முன் பிணை அளித்தது.

திரு. திருநாவுக்கரசு கைது செய்யப்படும் நிலை ஏற்பட் டால் இரண்டாயிரம் ரூபா வுக்கான சொந்தப்பிணையி லும் அதே அளவு தொகைக்கு இரண்டு தனிநபர் பிணையி லும் விடுதலை செய்ய வேண் டும் என்று உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். ஜனார்த்த னம் உத்தரவிட்டார்.

திருநாவுக்கரசின் உதவியா ளர் பாரதிக்கும் உயர்நீதிமன் றம் முன்பிணை வழங்கியுள் ளது.

இந்த இருவரையும் ஊழல் குற்றச்சாட்டு வழக்கில் காவ லில் வைப்பதற்குத் தடை விதித்து சென்னை செஷன்ஸ் நீதிமன்றம் பிறப்பித்த உத்த ரவை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ் ஜனார்த்தனம் கடந்த புதன்கிழமை தள்ளுபடி செய் திருந்தது தெரிந்ததே.

அதை அடுத்து தாங்கள் கைது செய்யப்படலாம் என்ற எண்ணத்தில் இவர்கள் இருவ ரும் முன்பிணை கோரி உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப் பித்திருந்தனர். (இ-எ)


உலக பல்கலைக்கழக சேவை-யாழ் கிளையின்
நிதிக்காக
யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்
நடிக்கும்
'அன்னை இட்ட தீ' நாடகம்
காலம்:- 27-09-92 ஞாயிறு மாலை 4 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.
நுழைவுச் சீட்டுக்கள்:- 50/- 20/-
கிடைக்கும் இடங்கள்:- அபிராமி விலாஸ் (பல்கலைக் கழக பிரதானவாயில் முன்பாக), கலையரங்க வாயில்.
(22668)



யாழ்ப்பாணம்
மாநகராட்சி மன்றம்
தற்காலிக குடும்பநல
உத்தியோகத்தர்கள்
(மருத்துவ மாதர்கள்)
பதவி வெற்றிடங்கள்
யாழ்ப்பாண மாநகரசபை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் குடும்பநல உத்தியோகத்தர் பதவி வெற் றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.
தகைமைகள்:
மருத்துவ மாதுவாகப் பதிவு செய்தவராகவும், சுகாதாரசேவைப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட தகைமைச் சான்றிதழ்களைப் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
அரச சேவையிலிருந்து இளைப்பாறிய அனுபவம் மிக்க உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது
விண்ணப்பதாரர்கள் தாமே தயாரித்த விண் ணப்பத்துடனும், தமது தகைமைகளை நிரூபிக் கும் மூலச்சான்றிதழ்களுடனும் 03 - 10 - 92 ஆம் திகதி காலை 9 மணிக்கு நல்லூரிலுள்ள மாநகர சபை அலுவலகத்தில் சமுகமளிக்கவும்.
வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
23-09-92.


# ராமதாஸ், பண்ருட்டியை விடுவிக்க சென்னை உயர்நீதிமன்று உத்தரவு

சென்னை, செப்: 25

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்கள் டாக்டர் எஸ். ராமதாஸ், பண்ருட்டி இரா மச்சந்திரன் ஆகியோரையும் அக்கட்சியைச் சேர்ந்த மற் றும் இருவரையும் பிணையில் விடுதலை செய்யும்படி சென்னை உயர் நீதிமன்ற நீதி பதி எஸ் ஜனார்த்தனம் நேற்று உத்தரவிட்டார்.

இவர்கள் ஒவ்வொருவரும் சென்னை மெட்ரோபொலி டன் மாஜிஸ்திரேட் ஒருவர் முன் ஆயிரம் ரூபாவுக்கு உறுதிமொழிப் பத்திரங்களை சமர்ப்பிப்பதன் பேரில் இவர் களை விடுதலை செய்யவேண் டும் என்று நீதிபதி தமது உத் தரவில் குறிப்பிட்டுள்ளார்.

தேசவிரோத குற்றங்களுக் காகவும், சட்டவிரோதத் தடுப் புச் சட்டவிதிகளின் கீழும் கடந்த 18 ஆம் திகதி ராம தாஸ், பண்ருட்டி இராமச்சந் திரன், தமிழ்த் தேசிய கட்சி யைச் சேர்ந்த ப. நெடுமாறன் உட்பட மற்றும் இவர் கைதா னதும்—

அவர்களில் நெடுமாறன். மற்றும் பலரைத் தவிர ராம தாஸ், பண்ருட்டி ஆகியோர் அரசியல் கட்சியைச் சேர்ந்த வர்கள் என்ற ரீதியில் மறு நாள் பிணையில் விடுவிக்கப் பட்டதும்—

அதன் பின்னர் ராமதாஸ், பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோர் கடந்த திங்கள் இரவு மீண்டும் பிணையில் செல்ல முடியாதவாறு விசேட ''வாரண்ட்'' உத்தரவின் பேரில் கைதானார்கள் என்ப தும் தெரிந்தவையே. (ஒ-எ)

## அறிவியல் கருத்தரங்கு இன்று நடைபெறாது

யாழ்ப்பாணம், செப். 25

சொக்குவிலுள்ள விடுத லைப் புலிகள் மாணவர் அமைப்பின் நடுவப் பணியகத் தில் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும் அறிவியல் கருத்தரங்கு—

இன்று நடைபெறமாட் டாது என்றும், இத்தொடர் அடுத்த வாரம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ)

## இன்று

கொக்குவில் ஸ்ரீ ஞானபண் டித வித்தியாசாலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இலக்கிய தினம் கொண்டாடப்படுகி றது.

பிரதம விருந்தினராக யாழ் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரை சிங்கம் கலந்து கொள்கிறார்.

## அரியாலையில் விளையாட்டு விழா

அரியாலை கிழக்குப் பிரதே சத்தில் அமைந்துள்ள ஐந்து பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணிக்கு அரியாலை மத் திய விளையாட்டு மைதானத் தில் ஆரம்பமாகும்.

விடுதலைப் புலிகள் இயக் கப் பிரமுகர்களான திரு. இளங்குமரன், திரு. இளம் பருதி, செல்வி வதனி, செல்வி ஜெயா, செல்வி நளாயினி ஆகியோர் பிரதம, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

இறுதியில் கலை நிகழ்ச்சி களும் இடம்பெறும். (ஒ)

# வெள்ளியன்று 350 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது

## வங்கி முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப்: 25

கடந்த வெள்ளிக்கிழமை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போதிலும், கடமைக் குச் சமுகம் தந்த ஊழியரின் உதவியுடன், தள்ளாத வய திலும் விரைந்து வந்து காத் திருந்த 350 க்கும் அதிகமான ஓய்வூதியம் பெறுபவருக்கு மட்டுமல்லாது எமது வங்கி வாடிக்கையாளருக்கும் பணம் வழங்கப்பட்டது.

இவ்வாறு, 21-9-1992 ஆம் திகதி உதயனில் வெளிவந்த ''ஓய்வூதியம் பெறுவதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும்'' என்ற செய்தி குறித்து இலங்கை வங் கியின் யாழ்ப்பாணம் இரண் டாம் கிளையின் முகாமை யாளர் அறிவித்திருக்கிறார்.

வங்கியின் அலுவலகள் வாடிக்கையாளருக்கு ஒரு மணித்தியாலம் என்று மட்டுப் படுத்தப்பட்ட போதிலும் எமது வேலைகள் வழமை யிலும் பார்க்க மேலதிக நேரம் நடைபெற்றது — என்றும் அவர் உதயனுக்கு எழுதிய கடி தத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆசிரியர் குறிப்பு:

ஊரடங்கின் போது குறிப் பிட்ட வங்கிக்கிளை திறந் திருந்தது என்பதையோ, ஒரு மணி நேரத்துக்கு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன என் பதையோ உதயன் செய்தி மறுத்துரைக்கவில்லை.

முதலாவது கிளையில் ஓய் வூதியம் பெறச் சென்ற சகல ருக்கும் அதிர்ஷ்டம் இருந்தது என்பதையும், இரண்டாவது கிளையில் சகலருக்கும் அன்றி ஒரு சாராருக்கே அதிர்ஷ்டம் கிடைத்தது என்பதையுமே நாம் சுட்டிக்காட்டி இருந் தோம்.

அன்று காலை 10.05 மணிக் குச் சென்றவர்கள் உள்ளே செல்ல முடியவில்லை. வங்கி யின் முன்பக்கக் கண்ணாடிக் கதவு பூட்டப்பட்டிருந்தது.

''நெருக்கடியான சூழ்நிலை யிலும் உயிரைப் பணயம் வைத்து ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த போதும் எமது வாடிக்கையாளரின் நலன் கருதிக் கருமமாற்றிய எமது ஊழியர் என்று முகாமையா ளர் தமது கடிதத்தில் குறிப் பிட்ட போதிலும்—

ஓய்வூதிய வவுச்சர்கள் தாம தமாகக் கிடைத்ததால் பலர் அன்று காலை தான் தபால் அலுவலகங்களில் அவற்றைப் பெற முடிந்தது என்பதை வங்கி ஊழியரும், நிர்வாக மும் உணராமல் போனது கவ லைக்குரியது— .

வங்கியைத் திறந்து பணி யாற்றி, 350 பேருக்கு ஓய்வூதி யம் வழங்கிய கிளை அலுவ லர்களால் மேலும் சுமார் 50 பேருக்கு வழங்க முடியாமற் போனதால் தான் அவர்க ளுக்கு அதிர்ஷ்டம் இருக்க வில்லை என்று உதயன் செய்தி யில் குறிப்பிட்டிருந்தோம். (அ)

## ராமதாஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரியை அரிவாளால் வெட்டியதையும் அவர் தற் போது சிகிச்சை பெற்று வருவ தையும் திருமதி பொன்னம் மாள் சுட்டிக்காட்டினார்.

அந்த ரயில் நிலையம் வழி யாகச் செல்லும் பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயிலை நிறுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் சிலர் கேட்டதற்கு அந்த அதி காரி இணங்காததால் அவர் வெட்டப்பட்டார் என்று சட்டசபையில் தெரிவிக்கப்பட் டது.

முதலமைச்சர் பேசுகையில், பஸ்கள் மீது கல்வீச்சு இடம் பெறுகிறது. பஸ் ஊழியர்கள் தாக்கப்படுகின்றார்கள் என்று சொன்னார்.

நேற்று (வியாழன்) திண்டி வனம் அருகே தண்டவாளத் தில் பாறாங்கற்கள் வைக்கப் பட்டிருந்தன. சரக்கு ரயில் சாரதி அவதானித்து ரயிலை நிறுத்தினார். இவ் வாறு அராஜகத்தை ஒரு செய லாகவும், தேச விரோதத்தை ஒரு கொள்கையாகவும் கொண்ட பாட்டாளி மக்கள் கட்சி உடனடியாக மத்திய அரசினால் தடை செய்யப் பட வேண்டும் என்றும் முத லமைச்சர் தெரிவித்தார்.

சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா குறுக்கிட்டு, முத லமைச்சரின் வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சட்டசபை யின் சார்பில் தாம் கேட்டுக் கொள்வதாக தெரிவித்தார். (ஒ-எ-த)

## 10 படையினர் பலி

ஹைதராபாத், செப். 25

ஆந்திர மாநிலத்தில் நிலக் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் 10 பாதுகாப்புப் படை யினர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இள… மாநகராட்சி மன்ற யாழ்ப்பாணம்

# கிளிநொச்சியில் அகதிகளை குடியமர்த்த நடவடிக்கை

## ரி. ஆர். ஓ. மேற்கொண்டுள்ளது

பரவி, செப். 25

அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்களை கிளிநொச்சி மாவட்டத்தில் குடியமர்த்திப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (ரி. ஆர். ஓ) மேற்கொண்டு வருகிறது.

இதற்கு முன்னோடியாக சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலை, சங்கானை தேவாலயம் ஆகிய முகாம்களில் தங்கியிருந்த 75 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 300 பேர் கடந்த புதன்கிழமை 5 பஸ்கள் மூலம் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேலும் அங்கு சென்று வாழ விரும்பும் இடம் பெயர்ந்த மக்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

இதே வேளை—

மேற்படி கழகம் சங்கரத்தைப் பகுதியில் ஏற்கனவே 100 குடிசைகளை அமைத்து மாதகல், சில்லாலைப் பகுதிகளைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்களை குடியமர்த்தி உள்ளது (த-12)

# அமெரிக்க சிறைகளில் தடுத்து வைக்கப்பட்ட

# இலங்கைத் தமிழர்களும் விடுதலை செய்யப்பட்டனர்

வாஷிங்டன், செப். 25

அமெரிக்கச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தஞ்சம் கோரி விண்ணப்பித்த வெளிநாட்டுப் பிரஜைகளின் முதலாவது தொகுதியினர், அந்த நாட்டின் குடிவரவு மற்றும் குடிமகனாக்கும் சேவைத் திட்டத்தின் புதிய வழிகாட்டுதலின் கீழ் அண்மையில் பரோலில் விடுதலை செய்யப்பட்டனர்.

இத்தொகுதியில் சில இலங்கைத் தமிழரும் இடம்பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தயாளினி சிவசுந்தரம், ரவீந்திரன் கிருஷ்ணசாமி, இராசையா லோகநாதன் ஆகியோரே அவர்கள் என்று தகவல் வெளியாகியிருக்கிறது

இவர்களில் தயாளினி சிவசுந்தரம் கலிபோர்னியாவில் உள்ள மூன்று சிறைகளில் 72 தினங்களைக் கழித்தார். இலங்கைப் படையினரால் தாம் கைது செய்யப்பட்டு, சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் முறையிட்டிருந்தார்.

அவரது தஞ்சம் கோரும் விண்ணப்பம் பரிசீலனை செய்து முடிவடையும் வரை பலோ அல்ரோவில் தமது மாமியாருடன் அவர் வசிப்பார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பரோலில் விடுதலை செய்யப்பட்ட தஞ்சம் கோருபவர்கள், குடிவரவு அதிகாரிகளை ஒழுங்காகச் சந்திக்க வேண்டும் என்றும்—

அவர்களது விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் சமயம் சமுகமளித்து இருக்க வேண்டும் என்றும்—

அவர்களது விண்ணப்பங்கள் விசாரணையின் பின் நிராகரிக்கப்படும் பட்சத்தில், நாடு கடத்தப்படுவதற்குத் தம்மை தயார்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளனர்.

ஒழுங்கான தஸ்தாவேஜுகளின்றி அமெரிக்க விமான நிலையங்களில் கடந்த ஆண்டில் சென்று இறங்கிய சுமார் 49 ஆயிரம் வெளிநாட்டார் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

இதனால் சிறைகளில் ஏற்பட்ட இடநெருக்கடி காரணமாக, தஞ்சம் கோருபவர்களின் விஷயத்தில் மனிதாபிமான அணுகுமுறையை கடைப்பிடிக்க அமெரிக்க அரசு தீர்மானித்தது.

இதன்படி, தஞ்சம் கோரி உள்ள விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும் வரை பரோலில் விடுதலை செய்யப்பட வகை செய்யப்பட்டுள்ளது. (த-எ)

## தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சை திகதி மாற்றம்

தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதியில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

26 ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம், வேலணை ஆகிய கோட்டங்களுக்கான நேர்முகப் பரீட்சை அன்றைய தினம் தியாகி திலீபனின் நினைவு தினமாகையால் அன்று நடைபெறமாட்டாது என்றும்—

அந்தப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ். கோட்ட அலுவலகத்தில் முற்பகல் 11 மணிக்கும், வேலணைக் கோட்ட அலுவலகத்தில் பிற்பகல் 3 மணிக்கும் நடைபெறும் என்றும் — அவர் அறிவித்துள்ளார். (இ-5)

திலீபன் நினைவாக

# இன்று இடம்பெறும் சிரமதானப் பணிகள்

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி லெப்.கேர்ணல் திலீபனின் 5ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு இன்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெறவுள்ள சிரமதானப் பணிகள் பற்றிய விபரம் வருமாறு:-

தென்மராட்சிக் கோட்டம் — கொடிகாமம் வட்டத்தில் மாவீரர் மண்டபம், நூல் நிலையம் என்பன துப்புரவு செய்யப்படும்.

கைதடி வட்டம் — மறவன்புலோ றெனோ வீதி, கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி வடக்கு ஜான் பாலர் பாடசாலை என்பன துப்புரவு செய்யப்படும்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கெற்பெலி பண்டிதர் குடியிருப்பில் சிரமதானப் பணியில் ஈடுபடும். இதே அமைப்பு யாழ்.கோட்டத்தில் இந்து மகளிர் கல்லூரியில் திலீபன் நினைவுக் கூட்டத்தினை பிற்பகல் 3 மணிக்கு நடத்தும்.

இதேவேளை —

கடற்புலிகளின் அனுசரணையுடன் தொண்டமனாறு சந்திக்கு அருகாமையிலும், வத்திராயன் விளையாட்டரங்கிற்கு அருகாமையிலும் உண்ணா விரதமும், அஞ்சலிக் கூட்டமும் இடம்பெறும். (த-ம-144)


## உதயன் வெளியீட்டகத்தினர் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும்

## கட்டுரைப் போட்டி

1. பாடசாலை மாணவர்களுக்கான போட்டி:

மேற்படி போட்டியில் பங்குபற்றத் தகுதியான மாணவர்கள் கொத்தணி ரீதியாகக் கோட்டக் கல்வி அதிகாரிகளினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் அக்டோபர் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மாணவர்களுக்கான அனுமதிப் பத்திரமும், அறிவுறுத்தல்களும் அடுத்த வாரம் கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

2. பொதுப் போட்டி:

இப்போட்டிக்கு பெரும் எண்ணிக்கையிலான கட்டுரைகள் கிடைக்கப்பெற்றன. அவை தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

போட்டி முடிவுகள் அக்டோபர் இறுதி வாரத்தில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

(ஈ)


# இனப்பிரச்சினை உள் விவகாரம்; ஐ. நா. அமைப்பு தலையிடாது

## பிரதமர் விஜேதுங்கா சொல்கிறார்

கொழும்பு, செப். 25

வடக்கு - கிழக்குப் பிரச்சினை இலங்கையின் உள் நாட்டு விவகாரமாகும். இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது வேறு எந்த சர்வதேச அமைப்புமோ இப் பிரச்சினையில் தலையீடு செய்யும் என நாம் எண்ணவில்லை; எதிர்பார்க்கவும் இல்லை.

பிரதமரும் பாதுகாப்புப் பதில் அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சி எம். பி ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், பிரதமர் இக்கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இலங்கைக்கான நிதி மற்றும் உதவிகளை நிறுத்தக் கோரி பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு யாழ். பிரஜைகள் குழு மகஜர்கள் அனுப்பியது பற்றி அரசாங்கத்துக்கு எதுவும் தெரியாது;

வெறுமனே பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளை வைத்துக் கொண்டு நாம் நடவடிக்கை எடுக்க முடியாது. யாழ். பிரஜைகள் குழுவிடம் இருந்து ஜனாதிபதிக்கு எந்த ஒரு மகஜரும் கிடைக்கவில்லை.

இவ்வாறு பிரதமர் தமது பதிலில் தெரிவித்தார். [illegible]


## பேக்கரி உரிமையாளர்களுக்கு!

சண்டிலிப்பாய், மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகளிலுள்ள பேக்கரி உரிமையாளர்கள் தங்கள், தங்கள் பேக்கரிகளை இயக்காத நிலையில் வைத்திருப்பின், இடம்பெயர்ந்த மக்களின் நலன்கருதி பாண், பிஸ்கட், பணிஸ் போன்ற உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு தயவு செய்து சங்கானை அரசாங்க இயந்திர மட்கல நிலையத்தில் இயங்கி வரும் பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளருடன், உடன் எழுத்து மூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,

பண்டத்தரிப்பு.

(இ-3509)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## கணக்கியல்

A/L 93, 94 புதிய அலகுகள்

ஆரம்பம்: 27-09-1992 ஞாயிறு

A/L 93

சனி } 2 — 3 உற்பத்திக் கணக்கு
ஞாயிறு } 3 — 4

பங்குடமை

A/L 94

சனி, ஞாயிறு } 1 — 2 வழுக்களும் திருத்தங்களும்

S. K. பிரபாகரன் B. B. A.

★ எல்லா அலகுகளுக்கும் ஒரே கட்டணம் அறவிடப்படும்.

★ ஒவ்வோர் அலகு முடிவிலும் கடந்த கால வினாக்கள் செய்யப்படும்.

(இ-3511)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி, பாடநெறி, பொது விவேகம், மொழித்திறன், ஆக்கம்: T. லோகநாதன் B. A., எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
[சி-3388]

## மணமக்கள் தேவை

எங்களிடம் சகல தரங்களிலும் உள்நாட்டு, வெளி நாட்டு மணமக்கள் உண்டு. பதிவு செய்வதற்கு எதுவித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது. சாதக விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்; 211/13T, செ தில்லைச் சந்திரன் [நேரு] வீதி, ரெம்பின் றோட் ஊடாக யாழ்ப்பாணம். (22638)

## விலைக்குத் தேவை

பாவித்த நல்ல நிலையில் உள்ள [Second Hand] றியோனற் காது கேட்கும் கருவி [Rionet Hearing Aid] விலைக்குத் தேவை. வைத்திருப்பவர்கள் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்; இல. 445, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (22656)

## கோழித்தீன் பைகள்

கோழித்தீன் வெற்றுப் பைகள் தேவை. தொடர்பு: ''மில்க்வைற்''. [சி-3403]

## பனை ஓலைச்சார்வு

பனை ஓலைச்சார்வு வாங்குகிறோம். மில்க்வைற்.
[சி-3297]

## இலவச திருமண சேவை

34 வயது, கார்த்திகை - 3, செவ்வாய் 2, ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கு தகுந்த மணமகள் தேவை பெண்ணை அழைக்க ஒழுங்குகள் செய்யப்படும். தொடர்பு: ஞாயிறு காலையில். த. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[22624]

## துர்க்கா திருமண சேவை

31 - 08 - 1992 முதல் துர்க்கா திருமண சேவை, சிவசக்தி ஸ்ரோர்ஸ், இல. 194, நாவலர் றோட், யாழ்ப்பாணம். சகலரும் மேற்கூறிய முகவரிக்கு திங்கள், புதன் தொடர்பு கொள்ளவும்.
[5337]

## சோதிடம்

விவாகத் தடை, தொழில் தடை, கல்வித்தடை போன்ற துரதிர்ஷ்டங்கள் நீங்க அதிர்ஷ்டம் அழைக்கிறது சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெற உத்தரவாதம். ஸ்ரீசக்தி உபாசகர் ஸ்ரீமாலை வநாயகர் சோதிட நிலையம், இல: 96, கோவில் வீதி, [கைலாசபிள்ளையார் கோவில் சந்தி], நல்லூர்.
[22631]

## FOR SALE

Portable English Typewriter, Sony / Two In One Radio sets, Couch / Teak beds with Matresses Ebony/ Iron Safes, Teapoys, Dining Chairs, Flower pots, Crockery Glassware Eversilver, Antenna No 7, Somasundaram Avenue, Chundikuli.
[22661]

# குழந்தை மரணத்தை தடுக்க 'ஜீவனி' பானம் சிறந்தது

## ஐ. நா. நிபுணர் கருத்து

கொழும்பு, செப் 25

"ஜீவனி' பானத்தை உபயோகித்தால் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் காப்பாற்ற முடியுமென ஐ. நா. சர்வதேச குழந்தைகள் நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ஜேம்ஸ் பீ. கிரான்ட் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்காசியாவிலுள்ள குடும்பங்களில் 20சதவீத குடும்பங்களிலேயே குழந்தைகளுக்கான ஜீவனி பானம் உபயோகிக்கப்படுகின்றது. 80 சதவீத குடும்பங்களில் அவை உபயோகிக்கப்படுவதில்லை. இப்பானம் இப்பிராந்தியத்தில் உபயோகிக்கப்படுமாயின் வயிற்றோட்ட நோயினால் நாளொன்றுக்கு இறக்கும் 2,500 குழந்தைகளைக் காப்பாற்றமுடியும் எனவும் திரு. ஜேம்ஸ் கிராண்ட் தெரிவித்தார்.

'யுனிசெப்' நிறுவனத்தின் ஆதரவில் 'ஜீவனி' ஆஸ்பத்திரிகள் மூலம் விநியோகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.
[ஒ-ம]

# ஊனமுற்ற 8,000 படையினர்

கொழும்பு செப், 25

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட மோதலினால் இராணுவத்தில் 8000 பேர் ஊனமுற்றுள்ளனர்.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன இத்தகவலைத் தெரிவித்தார்.

வாதுவ ஓய்வுகால உல்லாச விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள 150 ஊனமுற்ற இராணுவத்தினரை அவர் அண்மையில் சென்று பார்வையிட்டார். [இ-ம]

# ஆங்கில போதனையாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, செப். 25

மஹரகம தேசிய கல்வி நிறுவகம் பட்டப்பின் ஆசிரியர் கல்வி டிப்ளோமா பாடநெறியில் தமிழ் மொழி மூல மாணவருக்கு ஆங்கிலம் போதிப்பதற்கான விரிவுரையாளர்களை தெரிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

இப்பதவிக்குத் தெரிவாவோர் தமிழ்மொழி மூல பயிற்சிக்காக யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மட்டக்களப்பு, கல்முனை, கொழும்பு, கண்டி, காலி பிரதேச நிலையங்களில் கடமைபுரிதல் வேண்டும்.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டமும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும் பெற்றிருத்தல் வேண்டும். சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டிருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் அக்டோபர் மாதம் இரண்டாம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், பட்டப்பின் ஆசிரியர் கல்வித் துறை தேசிய கல்வி நிறுவகம், மஹரகம என்னும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
[ஒ-ம]

# கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.

A/L - 93
Day Classes

பிரிவு-II

பொருளியல் —
திரு. உதயன்
கணக்கியல் —
திரு ஸ்ரீ
வர்த்தகம் —
பிரபல ஆசிரியர்
அளவையியல்—
திரு. சயந்தன்
இந்து நாகரிகம்
திரு. ஜெ. தீஸ்வரன்

குறிப்பு:
1. வாரத்தில் நான்கு நாட்களும் வகுப்பு நடைபெறும்.
2. எல்லா அலகுகளுக்கும் ஒரே கட்டணம் அறவிடப்படும்.

பிரிவு I அனுமதிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன

பிரிவு - II
ஆரம்பம்: 29-09-1992

முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும். நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறலாம்.

- நிர்வாகி.

(சி-3516)

# அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப். 25

கல்வியங்காடு வீரபத்திர சுவாமி கோவில் வழிபடுவோர் சபையினர், கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பயிலும் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு ஒரு தொகுதி அப்பியாசக் கொப்பிகளை சபை நிதி மூலம் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். [ம-5]

# SPOKEN ENGLISH

By
BRITTO

புதிய பிரிவு
ஆரம்பம்:
27 - 09 - 1992
(10 மணி)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-3507)

# திருமலை, வவுனியாவில் ஐ. நா. அகதிகள் அலுவலகம்

தமிழகத்தில் இருந்து திரும்பும் அகதிகளின் நலன்களைக் கவனிக்க திருகோணமலையிலும், வவுனியாவிலும் ஐ நா. அகதிகள் தூதரக அலுவலகங்கள் இயங்கவிருக்கின்றன.

அந்த இரு மாவட்டங்களிலும் தற்சமயம் அரசால் நிர்வகிக்கப்பட்டு வரும் நாடு திரும்பிய அகதிகளுக்கான முகாம்களில் நிலவும் சீர்கேடு, பாதுகாப்பின்மை காரணமாக அவற்றை ஐ நா. அகதிகள் தூதரகம் பொறுப்பேற்கவுள்ளது.

முகாம்களிலுள்ள அகதிகளைப் பராமரித்தல், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்யவே இந்த அலுவலகங்கள் திறக்கப்படவிருக்கின்றன. (த-ம-3)

# கேள்வி அறிவித்தல்

## கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

### யாழ்ப்பாணப் பிரதேச கல்வித் திணைக்களத்திற்குத் தேவையான தளபாடங்கள், விவசாயக் கருவிகளை வழங்கல்

01. யாழ். கல்வித் திணைக்களத்திற்கும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கும் தேவையான கீழே காட்டப்பட்டுள்ள தளபாடங்கள், விவசாயக் கருவிகள் முதலியவற்றை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமாக முத்திரை இடப்பட்ட கேள்விகள் தளபாட உற்பத்தியாளர்களிடமிருந்தும் விநியோகஸ்தர்களிடம் இருந்தும் 14-10-1992ஆம் திகதி காலை 10-00மணி வரை யாழ். கல்வித்திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்விகள் இத்திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட படிவத்தில் இணைப் பிரதிகள் தயாரிக்கப்பட்டு இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் கேள்வி முடிவு நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் 'அலுவலகத் தளபாடங்களும், விவசாயக் கருவிகளும் வழங்குவதற்கான கேள்விகள்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும்; அச்சமயம் கேள்விதாரர்கள் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

03. கேள்விப்படிவங்கள், நிபந்தனைகள் மாதிரிப்படம் ஆகியவற்றினை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100/- மீளளிக்கத் தக்க வைப்புப் பணமாக ரூபா 250/- ஆக மொத்தமாக ரூபா 350/- இனை இவ்வலுவலகத்தில் செலுத்திப் பெற்ற உரிய பற்றுச் சீட்டினை (பொது 172) 12-10-92 ஆம் திகதி காலை 10-00மணிக்கு முன்னர் சமர்ப்பித்து எமது திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

### தேவையான தளபாடங்கள் விவசாயக் கருவிகள்

| | | |
|---|---|---|
| 01. | கண்ணாடி பொருத்தப்பட்ட முன் முகப்புகளைக் கொண்ட உருக்கு அலுமாரி. | |
| 02. | ஆசிரியர் மேசை | |
| 03. | தட்டெழுத்தாளர் மேசை | |
| 04. | தட்டெழுத்தாளர் கதிரை | |
| 05. | மகாநாட்டறை மேசை | |
| 06. | மகாநாட்டறைக் கதிரை | அ |
| 07. | உருக்கு அலுமாரி [சிறியது] | |
| 08. | புத்தக ராக்கை [உருக்கு] | |
| 09. | சாதாரண மேசை [உருக்கு] | |
| 10. | சாதாரண கதிரை [உருக்கு] | |
| 11. | கட்டில் 6' 3' | |
| 12. | கைக் கத்தி 6'' 7'' | |
| 13. | கைக் கத்தி 4'' 3'' | |
| 14. | பேனாக் கத்தி 3'' | |
| 15. | அரும்பு ஒட்டும் கத்தி | |
| 16. | பூ வாளி $1\frac{1}{2}$ கலன் | ஆ |
| 17. | மண்வெட்டி 6'' 6'' | |
| 18. | அலவாங்கு 18'' 7/8'' | |
| 19. | ஜீ ஐ வாளி — 10'' | |
| 20. | கட்டட வேலைக்கான தாச்சி — $14\frac{1}{2}$'' | |
| 21. | ஜீ. ஐ. வாளி — 14'' | |

ஒப்பம்: ஆர். சுந்தரலிங்கம்,
பிரதேச கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1992 - 09 - 24

(இ-3406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உள் மனதிலிருந்து உள் நோக்கம்

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கம் எதுவும் அரசுக்குக் கிடையாது.

ஸ்ரீலங்கா அமைச்சரவையின் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடன் பேசும் நோக்கம் கிடையாது என்று ரணில் கூறியதன் அர்த்தம் என்ன? இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கம் அரசுக்குக் கிடையாது என்பதேயாகும். இராணுவத் தீர்வையே அரசு நம்பியிருக்கிறது. வெற்றி கிடைக்காவிட்டாலும் போரைத் தொடருவது விடுதலைப் புலிகளை அழிப்பதாக அல்லது தோற்கடிப்பதாகக் கூறித் தமிழர்களை அழிப்பது. இதுவே அரசின் நோக்கம், நிலைப்பாடு, கொள்கை எல்லாம்.

அரசாங்கத்தின் உண்மையான நோக்கமும், நிலைப்பாடும் இவையே என்று இப்பத்தியில் நாம் பல தடவைகள் அடித்துக் கூறியுள்ளோம்.

ஆனால் —

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அரசியல் தீர்வுக்கான இதய நாடி என்று அரசு இன்னமும் சொல்லி வருகிறது. விடுதலைப் புலிகள் விரும்பினால் தீர்வுக்கான தமது யோசனைகளைத் தெரிவுக் குழுவிடம் கூறலாம் என்று சொல்லப்பட்டது. விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைத்து அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவிப்பதற்காகவே, இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று இன்னொரு வியாக்கியானம் கூறப்பட்டதும் உண்டு.

"இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு மூலம் தமிழ்ப் பகுதிகளை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதும், பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதுமான இரட்டை அணுகு முறையை அரசு கடைப்பிடித்து வருவதாக இதே ரணில், 5-6-92 இல் நடந்த வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியிருந்தார்.

இவ்வாறு பிச்சைக்காரனின் வாந்தி போல, அரசாங்கத் தரப்பில் பலவித கருத்துக்களும், வியாக்கியானங்களும், விளக்கங்களும் "கொட்டப்பட்டு" வருகின்றன. அவை மாதத்துக்கு மாதம், வாரத்துக்கு வாரம் மாறுகின்றன. இராணுவத் தீர்வு தான் உண்மையான நோக்கம். ஆனால் அரசியல் தீர்வு என வெளியே காட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே மேற்சொன்ன குழப்பங்கள், கலப்புகள், முரண்பாடுகள் எல்லாம்! இப்போது உள்நோக்கம் உள் மனதிலிருந்து நேராக வந்திருக்கிறது!!

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாவிடில் இனப்பிரச்சினை இப்போதில்லை எப்போதைக்குமே தீராது; தீரப்போவதில்லை. இனப்பிரச்சினைக்கு இருதரப்பாரும் சேர்ந்து தீர்வு காணாவிடில் அதன் விளைவு வேறுவிதமாக இருக்கும் என்பது தீர்க்கதரிசிகளுக்குப் புரியும். அரசாங்கத்தில் தீர்க்கதரிசிகள் இல்லாதபடியால், முடிவு அது நினைப்பதற்கு எதிர்மாறாகவே அமையும் என்பதற்கு ரணில் கட்டியம் கூறியிருக்கிறார்!

# எல்லைப்புற சிங்களக் கிராமங்களை பாதுகாப்பதற்கு முடியாத நிலையாம்

கொழும்பு, செப். 25

எல்லைப்புறங்களில் உள்ள சிங்களக் கிராமங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் மலேசிய நாட்டில் உள்ள பாதுகாப்பு முறையை பின்பற்றுவதாக இராணுவம் தெரிவிக்கிறது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள குடக்கச்சிகுடியா மற்றும் பிரப்பம்மடு பகுதிகளில் உள்ள கிராமவாசிகளை இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற்றி மடுத்தக் கோயிலில் தங்கவைத்துள்ளனர்.

கிராமவாசிகளை வெளியேற்றியதற்கான காரணத்தைக் கூறுகையிலேயே இராணுவத்தினர் தாம் மலேசிய முறையைப் பின்பற்றுவதாக விளக்கமளித்தனர் என்று "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

மலேசிய முறையின்படி —

முன்னணி பாதுகாப்பு நிலை [Forward Defence Line] ஒன்று எல்லைப்பகுதியில் அமைக்கப்படும். இந்த நிலைக்குள் வரும் கிராமங்களுக்கே இனிப் பாதுகாப்பு வழங்கப்படும். இந்த எப். டி. எல். பகுதிக்குள் வராத கிராமங்களுக்கு ஊர் காவல் படையினரின் பாதுகாப்பு மட்டுமே வழங்கப்படும் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு - கிழக்கு, வட மத்திய மாகாணங்களில் உள்ள எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களுக்கு கடந்த வாரம் விஜயம் செய்த சுதந்திரக் கட்சியின் ஹெல உறுமய அணி எம். பி.க்களான திலக் கருணாரத்ன, எஸ். எல். குணசேகரா ஆகியோரிடம் இந்த விவரங்களை வவுனியா இணைப்பதிகாரி கேர்ணல் தெளிந்த கலுபமஹன தெரிவித்தார்.

முன்னணி பாதுகாப்பு நிலைக்கு வெளியே உள்ள கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாத நிலை இருப்பதாகத் தாம் மறைந்த கொப்பேகடுவவிடம் தெரிவித்ததாகவும் —

மேலதிக துருப்புகளை அனுப்பி உதவுவதாக உறுதி அளித்த கொப்பேகடுவ வினால் 200 துருப்புகளை மட்டுமே அனுப்ப முடிந்தது என்றும் கேர்ணல் கலுபஹன தெரிவித்தார்.

எப்படியாயினும் — இந்த எண்ணிக்கை போதாத நிலையினால் அக்கிராமங்களில் இருந்து கிராமவாசிகளை வெளியேற்ற வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் —

இது விடுதலைப் புலிகளிடம் அப்பிரதேசங்களை ஒப்படைப்பதாகவே இருப்பதாகத் தாம் கருதுவதாகவும் கேர்ணல் கலுபஹன மேலும் கூறினார்.

முன்னணி பாதுகாப்பு நிலைப்பிரதேசத்தினுள் அப்புறப்படுத்தப்பட்ட கிராமவாசிகளை மீளக்குடியமர்த்த இராணுவம் தற்போது முயற்சித்து வருகின்றது.

இந்த யுத்தமே ஒரு பிரதேசத்தைப் பிடிப்பதற்காக நடத்தப்படும் ஒன்றாகவே இராணுவப் பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த நிலையில் சிங்கள மக்கள் குடியிருக்கும் அல்லது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசத்தை விட்டுக் கொடுப்பது ஒரு பின்னடைவே என்றும் அப் பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர்.

இச்சூழ்நிலையில் —

சிவில் நிர்வாகம் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது என்று அதிகார வட்டாரங்கள் கூறிக் கொள்வது அர்த்தமற்றதாகியுள்ளது.

கூடுதல் படையினரையும் போர் ஆயுதங்களையும் தந்துதவும்படி இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்கும் வரை, இராணுவத்தினால் எல்லைப்புறக் கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது முடியாத காரியமாகும். இல்லாவிடில், நடந்து கொண்டு இருக்கும் யுத்தம் மேலும் துன்பங்களைக் கொடுப்பதாகவே அமையும்.

இதேவேளை —

உயிரைப் பணயம் வைத்து யுத்தம் நடத்தும் சிப்பாயின் மனதில், நழுவிச் செல்லும் வெற்றியை நோக்கி தாம் சண்டையிடுகின்றோமா என்ற முக்கிய கேள்வி தான் எழலாம்.

—இப்படி 'சண்டே ரைம்ஸ்' விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

## இன்று முதல் உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 25

புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம் அதன் பாவனையாளர்களுக்கு செப்டெம்பர் மாதத்துக்குரிய இலவச உலர் உணவுப் பொருள் விநியோகத்தினை இன்று வெள்ளிக்கிழமை முதல் மேற்கொள்ளும்.

இப் பொருள்களை மேற்படி சங்கக் கிளைகளில் இம் மாதம் 30 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

## செஞ்சிலுவை ஜீப் விபத்தில் சிக்கி பலத்த சேதம்

கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்திற்கு சொந்தமான ஜீப் வண்டி வவுனியாவில் விபத்தில் சிக்கி பலத்த சேதமடைந்துள்ளது.

கிளிநொச்சிக்கு உணவுப் பொருட்களை ஏற்றி வந்த லொறிகளுக்கு பாதுகாப்பாக வந்து கொண்டிருக்கையில் இவ்விபத்து நிகழ்ந்தது.

## கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர் பதவியேற்கத் தவறினால் நியமனங்கள் ரத்தாகும்

முறிகண்டி, செப். 25

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர நியமனத்திற்கு தெரிவாகியுள்ள தொண்டர் ஆசிரியர்கள் இம் மாத இறுதிக்குள் பதவியேற்கத் தவறினால் அவர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர நியமனத்திற்கு தெரிவாகியுள்ள தொண்டர் ஆசிரியர்களுள் 120 பேர் ஏற்கனவே நியமனக் கடிதங்களைப் பெற்று பதவியேற்றுள்ளனர்.

இவர்களுக்கு மாதாந்த வேதனமாக 1,300 ரூபா வழங்கப்படும். மூன்று வருட தொலைக் கல்விப் பயிற்சியின் பின்னர் இவர்கள் பயிலுநர் ஆசிரியர் நிலையிலிருந்து பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் தரத்திற்கு உயர்த்தப்படுவர்.

இதேவேளை - நிரந்தர நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களின் ஒன்றுகூடல் சமீபத்தில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. கிளி. மாவட்ட கல்விப் பணிப்பாளர் எஸ். கந்தசாமி நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

(த-ம-97)

## ஈழத் தீவிரவாதிகளுக்கு தமிழகத்தில் இன்னும் ஆதரவு

### சட்டசபையில் ஜெயலலிதா

ஈழத் தீவிரவாதிகளுக்கு தமிழகத்திலுள்ள அரசியல் தலைவர்கள் சிலர் இன்னமும் ஆதரவளித்து வருகின்றனர்.

இப்படி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழக சட்டசபையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்துப் பேசுகையிலேயே முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மதுரையில் கடந்த சனிக்கிழமை தமிழக காவல்துறை சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பற்றியும் சட்டசபையில் குறிப்பிட்ட முதலமைச்சர், இது குறித்து விசாரணை செய்ய தனிப் பொலீஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றார்.

தமிழ்த் தீவிரவாதிகள் இன்னும் தமிழகத்தில் துணிச்சலுடன் நடமாடி வருவதையே இச்சம்பவம் எடுத்துக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் பேசுகையில், சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் அல்லது அவர்களினால் பயிற்சி அளிக்கப்பட்ட ஒரு குழுவினால் சுடப்பட்டிருக்கலாம் என்று காவல்துறையினர் கருதுகின்றனர் என்றார். (இ-ம)

## பெல்ஜியம் நாட்டிலும் பிரிவினைக் கோரிக்கை

பெல்ஜியம் நாட்டிலும் பிரிவினைக் கோரிக்கைகள் வலுவடைந்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரெஞ்சு மற்றும் டச்சு மொழி பேசும் இரு இன மக்களுக்கிடையே இந்த நிலை எழுந்துள்ளது.

160 ஆண்டுகள் இணைந்து வாழ்ந்தும் சந்தோஷமாக வாழ முடியவில்லை. எனவே பரஸ்பர இணக்கத்துடன் பிரிந்து செல்வதே நல்லது.

பிரெஞ்சு மொழி பேசும் மக்களின் அரசியல் அமைப்பின் தலைவர் ஒருவர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு சொன்னார். (த)

## 100 அகதிக் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், செப். 25

மன்னார் தச்சனார் மருதனார் மடுவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அமைத்த அகதி முகாமில் 100 அகதிக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

கடந்த 19 ஆம் திகதி இந்த முகாம் திறந்துவைக்கப்பட்டது. (இ-ம)

# வன்னி விவசாயிகளுக்கு விவசாயக் கடன்கள்

### மக்கள் வங்கி நடவடிக்கை

வன்னிப் பிரதேசத்தில் நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை மக்கள் வங்கி எடுத்துள்ளது.

புனர்வாழ்வுக் கடன் திட்டத்தின்கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ள ஒரு கோடி ரூபா நிதியிலிருந்தே மக்கள் வங்கி இந்தக் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் எஸ். அருளானந்தம் அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, இது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு பரந்தன், கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளைகள் மூலம் இக் கடன் வழங்கப்படவிருக்கிறது.

இவ்வாரம் முல்லைத்தீவுக்கு செல்லும் பிராந்திய முகாமையாளர் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளையும் இது தொடர்பாகச் சந்திக்க இருக்கிறார்.

முல்லைத்தீவு விவசாயிகளுக்கு மாங்குளம் கிளை மூலம் கடன் வழங்கப்படவிருக்கிறது.

ஒரு ஏக்கருக்கு ஆறாயிரத்து 450 ரூபா வீதம் கடன் வழங்கப்படும் என்றும் —

ஆகக் குறைந்தது ஒரு ஏக்கருக்கும், ஆகக் கூடியது மூன்று ஏக்கருக்கும் உரிமையாளர்களான விவசாயிகளுக்கே கடன் வழங்கப்படும் என்றும் — வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விசாரிக்க குழு நியமனம்

கொழும்பு, செப். 25

பொலீஸ் அதிபர் அந்தோனிப்பிள்ளை தியோபிளஸ் கொலை செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கு மூன்றுபேரைக் கொண்ட சிறப்பு புலன்விசாரணைக் குழு ஒன்றை நகர குற்றப் புலனாய்வுப் பணியகம் அதன் பணிப்பாளர் கொட்டிபிறே குணசேகரா தலைமையில் நியமித்துள்ளது.

திரு தியோபிளஸ் மகன் மட்டக்களப்பில் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதன் பின்னர், அங்கு உதவிப் பொலீஸ் அதிபராக கடமையாற்றிய தி. தியோபிளஸ் பாதுகாப்புக் காரணங்களுக்காக 1985 ஆம் ஆண்டு கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

# ஐ. நாவிலிருந்து யூகோ நீக்கம்

சேர்பியா மொண்டேநீகுரோ ஆகியவற்றை மட்டுமே கொண்ட யூகோஸ்லேவிய அரசை ஐ நா பொதுச்சபை தனது உறுப்புரிமையிலிருந்து நீக்கி வைத்துள்ளது.

ஐ. நா. சபையில் அங்கத்துவத்தைப் பெற இந்த யூகோஸ்லேவிய அரசு புதிதாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் ஐ. நா. அறிவித்துள்ளது.

யூகோஸ்லேவியாவை வெளியேற்றுவதற்கான தீர்மானத்துக்கு ஆதரவாக 127 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 26 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. [இ-3]

## திலீபன் நினைவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர் கந்தசுவாமி கோவிலடி உட்பட கோட்ட, வட்ட மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் உண்ணா விரதம் அனுஷ்டிக்கப்பட்டது

குமநகர் கொர்மாடியில் எட்டு இளைஞர்கள் ஆரம்பித்த 72 மணி நேர உண்ணா விரதம் நேற்று மாலை 6 மணியுடன் 48 மணித்தியாலங்கள் கடந்தன

பல இடங்களிலும் பெருமளவிலான சிரமதான நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### நாளை

இறுதித் தினமான நாளை சனிக்கிழமை பெரும் எழுச்சி நாளாக கொண்டாடப்படுகிறது வலிகாமத்தில் நல்லூரிலும் வடமராட்சியில் மாலிசந்தி அருகிலும், தென்மராட்சியில் நுணாவில் 190 ஆம் கட்டை யடியிலும் பிரதான நிகழ்ச்சிகள் காலை முதல் மாலை வரை நடைபெறும். அன்று நினைவஞ்சலிக் கூட்டங்களும் மேற்படி இடங்களில் இடம்பெறும்.

அன்றைய நிகழ்வுகளில் பெரியோர், பெண்கள், மாணவர்கள், அரச, வர்த்தக ஊழியர்கள், வடமாகாண தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் மற்றும் பல பொது அமைப்புகள் மன்றங்களினதும் அங்கத்தவர்கள் மேற்கூறிய மூன்று இடங்களிலும் ஆயிரக்கணக்கில் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பர். தனியார் கல்வி நிலைய, மற்றும் பிரத்தியேக வகுப்பில் பயிலும் மாணவர்களும் நினைவு நிகழ்வுகளில் கலந்து கொள்வர்.

[ள-3 15-51-162 17-111]

## சந்தேகநபர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

துப்புக் கிடைத்ததன் பேரில் குற்றத்தடுப்பு பணியகத்தைச் சேர்ந்த பொலீஸ் குழு ஒன்று அவரைக் கைது செய்வதற்காக வெள்ளவத்தை சர்வதேச பௌத்த நிலைய வீதிக்கு அருகில் மறைந்திருந்தது என்றும் —

கைது செய்ய முற்பட்ட சமயம் அவர் தமது கழுத்தில் தொங்கிய சயனைட் வில்லையை உட்கொண்டு தற்கொலை புரிந்தார் என்றும்— அப்பேச்சாளர் சொன்னார்.

பொலீஸ் குழு அந்த நபரிடம் இருந்த சுமார் 44 ஆயிரம் ரூபா பணம், வெடிமருந்துகள், கமரா அவருக்குச் சொந்தமான மற்றும் பொருள்களை மீட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாம்.

# மரண அறிவித்தல்கள்

## சிவஸ்ரீ சபாபதிக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்கள்

சுழிபுரம் குடியிருப்பைச் சேர்ந்தவரும், புளியங்கூடல் முத்துமாரி அம்மன் தேவஸ்தான முன்னைநாள் பிரதம குருக்களும், பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தானம் ஆகியவற்றின் பிரதம குருக்களும், தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தான உற்சவக் குருக்களுமாகிய சிவஸ்ரீ ச சுப்பிரமணியக் குருக்கள் புதன் பின்இரவு (24 9-92) இறைவனடி சேர்ந்தார். அன்னார் மீனாம்பாளின் அன்புக் கணவரும், சரவணபவானந்தன் (சுகதி நூல் நிலையம், மட்டக்களப்பு), விமலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சௌபாக்கிய லட்சுமி, பத்மநாபசர்மா (ஓய்வுபெற்ற வெளிக்கள உத்தியோகத்தர், மகேரிபாத் தடைப்பகுதி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஞானசரன் அபராஜிதன், விமலநாதன் (யாழ் பல்கலைக் கழக வணிகபீட மூன்றாம் வருட மாணவன்) பாஸ்கரன் லக்ஸ்!, திருமதி பத்மஜா, ரவிக்குருக்கள், சைலஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25-09-92) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலையத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
ந பத்மநாபசர்மா
[மருகர்]

குடியிருப்பு,
சுழிபுரம்

[22653]

## பசுபதி பரமலிங்கம் (சின்னத்தம்பி)

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வட்டுக்கச்சியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. பசுபதி பரமலிங்கம் (சின்னத்தம்பி) 24-09-1992 வியாழக்கிழமை (நேற்று) யாழ்ப்பாணத்தில் காலமானார். அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும், மோகன், ராதா, ராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவர். அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது சகோதரியின் இல்லத்தில் 25-09-1992 இன்று மு.ப. 10 00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திரு. சி. பாலசிங்கம் (மைத்துனர்)

இல. 20, பி. ஏ. தம்பி ஒழுங்கை,
அன்னார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[22670]

## மா. அந்தோனிப்பிள்ளை இராசையா (அப்புஜி)

ஓய்வுபெற்ற ஆசிரியரும் (பூநகரி வித்தியாலயம்), இளவாலையில் வசித்தவருமாகிய அந்தோனிப் பிள்ளை இராசையா 18-09-92 அன்று அகால மரணமானார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் அன்று மாலை 4-30 மணிக்கு நடைபெற்றன. அன்னார் திருமதி நாகரெத்தினத்தின் அன்புக் கணவரும், சத்தியநாதன் (இங்கிலாந்து), பாக்கியராஜா (டுபாய்), பவானி (டுபாய்), உதயசங்கர் (இங்கிலாந்து), சாந்திதேவி, லோகநாதன் (இங்கிலாந்து), றஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசம்மா (இங்கிலாந்து), அனுராதா, தெய்வேந்திரா (டுபாய்), றஞ்சி (இங்கிலாந்து), நாகராஜா (பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்), கத்ரின் (மலேசியா), ஸ்ரான்லி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நாகரெத்தினம்

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

(22669)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அக்காச்சி எழுச்சிக் கிராமத்தில் நாளை தீலீபன் நினைவு விழா

யாழ்ப்பாணம், செப். 25

புத்தூர் வாதரவத்தையில் அமைக்கப்பட்ட அக்காச்சி எழுச்சிக் கிராமத்தில் நாளை சனிக்கிழமை தியாகி திலீபனின் நினைவு விழா நடைபெறவுள்ளது.

தியாகி திலீபன் நினைவாக அமைக்கப்பட்ட அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு கடந்த ஆண்டு செப்டம்பர் 26 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

எழுச்சிக் குடியிருப்பு திறந்து வைக்கப்பட்ட ஓராண்டு நினைவு தினத்தை அப்பகுதி மக்கள் நாளை தியாகி திலீபனை நினைவு கூர்ந்து அனுஷ்டிக்கின்றனர்.

நாளை மாலை 7.30 மணிக்கு நினைவுக் கூட்டமும் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெறவுள்ளது. [இ-5]

## மாணவர் அமைப்பு நடத்தும் விழா

யாழ்ப்பாணம், செப். 25

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். கல்விக் கோட்டத்தினர் தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு விழாவை இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடாத்துகின்றனர்.

பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகும் பிரஸ்தாப விழா திருமதி அருள்நங்கை சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும், சிறப்பு விருந்தினராக மகளிர் படை பிரிவுத் தளபதி செல்வி ஜனாவும் கலந்து கொள்வர்.

கவியரங்கம், நாட்டிய நாடகம், வில்லுப்பாட்டு இசைகானங்கள் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும் (அ)

## உண்ணா நோன்பு

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவாக மூன்று நாள் உண்ணா நோன்பை செல்லையா தர்மசேனன் என்பவர் நேற்றுக் காலை 7.30 மணிக்கு நல்லூரில் ஆரம்பித்தார்.

## முள்ளியில் சிரமதானம்

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி லெப். கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகளில் நேற்று ஆனைக்கோட்டைப் பகுதியில் முள்ளி என்னுமிடத்தில் புதிய வீதி ஒன்று சிரமதானம் மூலம் அமைக்கப்பட்டது. [இ-5]

# புலிகள் இருந்தால் கைதாவார்களாம்!

## ரணில் சொல்கிறார்

கொழும்பு, செப். 25

கொழும்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும் தங்கியிருந்தால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

அப்படியான தகவல் கிடைத்தால் பொலீஸாருக்கு தெரியப்படுத்தலாம்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா புதன்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எவரையும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகக் கொழும்புக்கு அழைக்கவில்லை.

கடந்த ஆறு மாதங்களாக இதுபோன்ற வதந்திகள் எழும்பியுள்ளன. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுகள் நடைபெறவில்லை என்று கடந்த வாரம் நான் உறுதியாகக் கூறியிருந்தேன்.

''பேச்சுவார்த்தைக்கு உகந்த இடம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே யாகும்''— இவ்வாறு அமைச்சர் ரணில் தெரிவித்தார். [த-எ]

## யுத்தம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயர்கள் சம்மேளனம் அரசு மீது குற்றப் பிரேரணை கொண்டுவந்துள்ளதாகக் கொழும்பு தகவல் தொடர்பு சாதனங்கள் வர்ணித்துள்ளன.

இந்நாட்டு மக்கள் அரசியல்வாதிகள் மீது வைத்திருந்த நம்பிக்கை முற்றாகத் தகர்ந்துள்ளது. நாட்டை இன்று எதிர்நோக்கியுள்ள அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தமது தலைவர்களால் தீர்வு காண முடியாது என்ற எண்ணம் நாளாந்தம் மக்கள் மத்தியில் பெருகி வருகிறது.

மக்கள் தமது வருமானத்தைக்கொண்டு நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது.

அரசின் பொருளாதார நடவடிக்கைகள் செல்வந்தர்களுக்கும், வறியவர்களுக்கும் இடையேயான இடைவெளியை அதிகரிக்கச் செய்துள்ளது.

பத்திரிகைச் சுதந்திரம், மனித உரிமைகள் இந்நாட்டில் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் முடிவின்றித் தொடரும் யுத்தத்தால் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகின்றன. மக்கள் துன்பங்களுக்கு ஆளாகிறார்கள்.

— இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ-எ-10]

## 708 அகதிகள் திருமலை புறப்பாடு

சென்னை, செப். 25

708 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று சென்னையில் இருந்து கப்பல் மூலம் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

இதுவரை 28 ஆயிரத்து 100 இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திரும்பி சென்றுள்ளனர் என மறுவாழ்வுத் துறை சிறப்பு ஆணையாளர் சிறு எம். இராம்தாஸ் தெரிவித்தார். [இ-எ-த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org